பக்கங்கள்:-27

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 05 | வெள்ளிக்கிழமை | 19.01.2024 | அதிர்வு 171 |
|---|---|---|---|---|---|

## கிளிநொச்சியில் ரயில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, அறிவியல்நகர் பகுதியில் நேற்று மாலை ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

முறிகண்டி பகுதியைச் சேர்ந்த 43 வயதான இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 06




# சுமந்திரன் தலைவராக வந்தால் தமிழ்த் தேசியம் அழிவது உறுதி

## சிறிதரனுக்கு ஆதரவாகவே வாக்களிக்க வேண்டும் என்று யாழில் வைத்து யோகேஸ்வரன் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதற்காகவே தலைவர் தெரிவில் போட்டியிடுகின்றேன். இருந்த போதிலும் தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் சக வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கே எனது வாக்கை அளிப்பேன். கிழக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் 90 வீதமான பொதுச் சபை உறுப்பினர்கள் தமிழ்த் தேசியத்துடன் பயணிக்கும் சிறிதரனுக்கே ஆதரவளிப்பார்கள். தமிழ்த் தேசியத்துக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் மற்றொரு சக வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அக்கட்சியில் இருந்து தமிழ்த் தேசியம் இல்லாது போய்விடும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக் களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார். 06

## பேச்சுக்களைக் குழப்பி இனப்படுகொலையை அரங்கேற்றியவர்களே ராஜபக்ஷ குடும்பத்தினர்

### கஜேந்திரகுமார் எம்.பி. விளாசல்



(எஸ்.நிதர்ஷன்)

பேச்சுவார்த்தைகளைக் குழப்பி பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு இனப் படுகொலையை அரங்கேற்றியவர்களே ராஜபக்ஷக்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி. குற்றம் சாட்டினார். 06




சாத்தான் வேதம் ஓதுவது பற்றி கேள்விப் பட்டிருக்கின்றீர்களா?

அதற்குள் இறங்க முன்னர் ஒரு தகவலை நினைவூட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

இந்த மிலேனியத்தின் ஆரம்பம் வரை 'காட்டிக் கொடுக்கும் துரோகி' என்று யாரையாவது குறிப்பிட விரும்பினால் அவரை 'காக்கை வன்னியன்' என்பார்கள்.

2004 ஆம் ஆண்டுடன் 06

# மேலும் மூன்று லட்சம் குடும்பங்கள் அஸ்வெசும திட்டத்தில் உள்ளீர்ப்பு



அஸ்வெசும திட்டத்தில் மேலும் 3 லட்சம் குடும்பங்களை உள்ளீர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6 லட்சத்து 40 ஆயிரம் அஸ்வெசும மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, அஸ்வெசும கொடுப்பனவை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 17 லட்சத்தை தாண்டியுள்ளதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்,

மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் காரணமாக இதுவரை அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொண்ட 5 ஆயிரத்து 209 குடும்பங்கள், அந்த சலுகையை இழந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த தவணைக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்னர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, எதிர்வரும் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான தவணைக் கொடுப்பனவுகள் கூடிய விரைவில் வங்கிகளுக்கு விடுவிக்கப்படவுள்ளன என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 11 லட்சம் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளன. அவற்றை கூடிய விரைவில் மீளாய்வு செய்யவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நலன்புரி நன்மைகள் சபை உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பதில் நிதியமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக மற்றும் ஒரு மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

அரசாங்கத்தினால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றில் மற்றுமொரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சோசலிச இளைஞர் சங்கத்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

மேற்படி சட்டமூலத்திற்கு அமைய, இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கரையோர பாதுகாப்பு படை ஆகிய தரப்பினரால் எந்த நபரையும் அடிப்படை காரணங்கள் இன்றி கைது செய்து தடுத்து வைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னக்கோனா?

## தகுதியானவர் அல்லர் என உயர் நீதிமன்றத்தில் மனு



பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டாமென வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினால் உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்தவர்களை சித்திரவதை செய்தமை தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் அடிப்படை உரிமைகளை மீறிய நபராக தேசபந்து தென்னகோன் பெயரிடப்பட்டுள்ளம. மற்றும் போராட்டக்களம் மீதான தாக்குதலில் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளமைக்கு அமைவாக, அவர் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தகுதியானவர் அல்லர் என ஐக்கிய மக்கள் சக்தியினர், தமது அடிப்படை உரிமை மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகாண்டா நாட்டுக்குப் பயணம்

இரண்டு சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகாண்டாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு, ஜி77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென் மாநாடு என்பவற்றில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி உகாண்டாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

உகண்டா குடியரசு ஜனாதிபதி யொவேரி முசேவெனியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு, “உலகளாவிய கூட்டு செழுமைக்கான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தல்” எனும் தலைப்பில் இன்றும், நாளையும் உகாண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

அதனையடுத்து, ஜனவரி 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் “எவரையும் கைவிடக்கூடாது” என்ற தலைப்பில் ஜி 77 மற்றும் சீனாவின் 03 ஆவது தென் மாநாடும் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.




# பிரபாகரனின் பிறந்தநாளுக்குக் கேக் வெட்டச் சென்ற யுவதியும் கேக் செய்தவரும் 53 நாள்கள் விளக்கமறியலின் பின் விடுதலை!



(கனகராசா சரவணன்)


மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாளையிட்டு கேக் வெட்டிக் கொண்டாடச் சென்ற சம்பவம் தொடர்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பெண் மற்றும் கேக்கை விற்பனை செய்த பேக்கரியில் கடமையாற்றி வந்த ஆண் உட்பட இருவரையும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய 53 நாள்களின் பின்பு மட்டக்களப்பு நீதிவான் நேற்று வியாழக்கிழமை வழக்கில் இருந்து விடுதலை செய்தார்.

கடந்த வருடம் நவம்பர் 26 ஆம் திகதி பட்டிப்பளை கொக்கட்டிச்சோலையை சேர்ந்தவரும் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடாவில் தற்போது வசித்துவருபவருமான பாலிப்போடி உதயகுமாரி என்ற பெண் சம்பவதினமான 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளையிட்டு நகரத்திலுள்ள பேக்கரி ஒன்றில் பிறந்தநாள் கேக் ஒன்றை வாங்கி அதில் "இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் - வே.பிரபாகரன் அண்ணா, தலைவர்" என எழுத்துப் பொறித்து வாங்கி எடுத்துக் கொண்டு கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்றுள்ளார். அவரைப் பின் தொடாந்து சென்ற புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து அவரை அந்தபகுதி வீதியில் வைத்து கைது செய்தனர்.

இதனையடுத்து குறித்த கேக்கை விற்பனை செய்த மட்டு நகரிலுள்ள பேக்கரியில் கடமையாற்றிவரும் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்தவருமான 35 வயதுடைய பரமேஸ்வரன் முனீஸ்வரன் என்பவரை கேக்கில் பிறந்த நாள் மற்றும் பிரபாகரனின் பெயரை பொறித்து கொடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு 53 நாள்கள் விளக்கமறியல் வைக்கப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை இருவரின் வழக்கும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டது. சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இவர்களை நீதிவான் வழக்கில் இருந்து விடுதலை செய்தார்.




கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக அரங்கம்
மஹாகவி
நூல்கள்
மஹாகவி
உருத்திரமூர்த்தியின்
ஆளுமைப்பகிர்வும் கலந்துரையாடலும்
"பிஞ்சுப்பாடல்கள்" அரங்காற்றுகை
காலம் : 20.01.2024
நேரம் : மாலை 3.00 மணி – 5.30
சுழிபுரம்
+94770780657, 0757670149


கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக அரங்கம்
மஹாகவியின்
ஆளுமைப்பகிர்வும், கலந்துரையாடலும்
"பிஞ்சுப்பாடல்கள்" அரங்காற்றுகையும்
ஈழத் தமிழ் இலக்கியத்தில் மக்கள் வாழ்வியலைப்
பேசுபொருளாக்கியிருந்தவர்களுள் து. உருத்திரமூர்த்தி மஹாகவி அவர்களை
நவீனக் கவி முன்னோடிகளில் ஒருவராகக் கூறுவது மரபு!
தலைமை
திரு. சோ.தேவராஜா
உரையாளர்கள்
சி.ரமேஷ்
" நவீன கவிதை இயங்கியலில் மஹாகவி "
மல்லிகா செல்வரட்னம்(அராலியூர் நிலா)
" ஊர்கூடித் தேர் இழுத்த கவி "
சின்னராஜா விமலன்
" கவியின் கிராமிய வாழ்வியலில்... "
கலாநிதி க.ஸ்ரீகணேசன்
" இருநாடகங்கள் "
அ.முருகதாஸ்
" கவியின் காவியங்களினூடு "
ந.இரவீந்திரன்
" சமூக நோக்கில் மஹாகவி "
அரசி விக்னேஸ்வரன்
" ஒரு கவியின் வாழ்வியல் "
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!
sathiamanai.library@gmail.com


நினைவேந்தல்
நிகழ்வு
CLICK HERE
VIDEO
ஈழத்தமிழர்
மனங்களில்
நீங்கா இடம் பிடித்த
கப்டன் விஜயகாந்
காலம் : 10.02.2024 (சனிக்கிழமை)
இடம் : Gemeinschaftszentrum Affoltern
Bodenacker 25, 8046 Zürich
நேரம் : 15.00
அனைவரையும் அன்புரிமையோடு
அழைக்கிறோம்
தொடர்புகளுக்கு
0764183254, 0789006668, 0794504050, 0797459415, 0789009006, 0765798182

# அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு: முதற்கட்ட நிதி விடுவிக்கப்பட்டுள்ளது

அரச பணியாளர்களுக்கான கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான முதற்கட்ட நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரச பணியாளர்களுக்கான சம்பளத்தை செலுத்துவதற்காக இதுவரையில் ஒதுக்கப்பட்ட 95 பில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாக 14 பில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, குறித்த 10 ஆயிரம் ரூபாவில் 5 ஆயிரம் ரூபா இந்த மாதத்தில் இருந்து வழங்கப்படும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்து 10 ஆயிரம் ரூபா, அரச பணியாளர்களின் சம்பளத்தில் இணைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரணிலைப் பொது வேட்பாளராகக் களமிறங்கக் கோரி மஹிந்தவின் கோட்டையிலும் தீர்மானம் நிறைவேற்றம்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தேசிய பொது வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என மாவட்ட மட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கோட்டை அம்பாந்தோட்டை மாவட்டமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் செயற்குழு என்பனவும் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் காக்கை வன்னியன் என்ற சொல் மருவி மறைந்து விட்டது. பதிலாக 'கருணா' என்ற பெயர்தான் காட்டிக்கொடுப்புக்குக் கனகச்சிதமாக இருக்கும் என்று தமிழர்கள் கருதும் நிலைமை ஏற்பட்டது. அத்தகைய பெருமையை ஈட்டிய பெருந்தகை(?) அவர்.

இப்போது அவர் வேதமும் ஓதத் தொடங்கி இருக்கிறார். அதைச் செவிமடுக்கும் போது விசனமும் சினமும் தான் வருகின்றன. அந்தச் சாத்தானின் வேதத்திலும் முன்னுக்குப் பின் முரண்பாடு.

"தமிழ் மக்களின் இருப்புக்களைத் தக்கவைக்க வேண்டுமாக இருந்தால் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் பதவி, பட்டங்களைத் துறந்துவிட்டு, ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு, எங்களுடைய தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். எங்களுடைய பலவீனங்களைத்தான் எதிரிகள் சிறந்தமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்" – என்று முதலில் கூறுகின்றார் அவர்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டப் பலத்தை, அந்த இயக்கத்தைப் பிளந்து, சீர்குலையச் செய்து, காட்டிக் கொடுத்துத் துரோகத்தனம் புரிந்து, தமிழர்களின் சுதந்திர தாயகத்தையே மண்ணாக்கிய சூத்திரதாரி அவர்தான். அவர், தமிழ் மக்களின் பலவீனங்களைத்தான் எதிரி சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான் என்று தத்துவம் பேசுகின்றார்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைத் தனது துரோகத்தால் பலவீனப்படுத்திய கோடாரிக்காம்பு, அந்தப் பலவீனம் குறித்துத் தத்துவம் பேசுகின்றது. தமிழர்களின் போராட்ட பலத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுத்து, தமிழர் தாயகத்தையே பலவீனப்படுத்திய துரோக சக்தி, அந்தப் பலவீனம் குறித்து உத்தமர் போல உபதேசம்செய்வதுதமிழர்களைமீண்டும்முட்டாள்கள் என கருதும் எத்தனம் ஆகும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் களமிறங்கி, தமிழ் வாக்குகளைப் பிரித்து, அதன் மூலம் அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தையே நாசமாக்கி, அதை சிங்களத்திடம் தாரை வார்த்த 'காக்கை வன்னியன்' கருணாதான்.

"தேர்தல் காலத்தில் பல கட்சிகள் போட்டி இடுகிறார்கள். நாங்களும் போட்டு இருக்கிறோம். ஆகவே நாங்கள்தான் வாக்குகளைப் பிரிக்கிறோம் என்பது முட்டாள்தனமான சிந்தனையும் கற்பனையுமாகும்" – என்றும் அவர் கூறுகின்றார்.

தமிழ் கட்சிகள் ஒரு குடையின் கீழ் அணி திரண்டு, ஐக்கியமாகத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும், எங்களுடைய பலவீனங்களைத்தான் எதிரி சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்று புலம்பிக் கொண்டு, மறுபுறத்தில் அம்பாறையில் தமிழ் வாக்குகளைப் பிரித்து, தமிழர் பிரதிநித்துவத்தை இல்லாமல் பண்ணிய தமது நாச வேலையை நியாயப்படுத்துகின்றார்.

இந்த பிதற்றல்களை எல்லாம் செவிமடுக்க வேண்டிய நிலைமை தமிழர்களுக்கு. பாவம் தமிழர்கள் – குறிப்பாக கிழக்குத் தமிழர்கள்.

## கிளிநொச்சியில் ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த யாழ். ராணி ரயிலேயே அவர் மோதுண்டுள்ளார்.

## சுமந்திரன் தலைவராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கு வடக்கு மாகாணத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், சிறிதரனும் போட்டியிடப்போவதாக நான் அறிந்தேன். அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து யாராவது போட்டியிட வேண்டுமென நான் ஏனையவர்களிடம் கோரிக்கை விடுத்தேன். அப்போது அவர்கள் என்னைப் போட்டியிடுமாறு வலியுறுத்தினார்கள். அதன்படியே நான் இந்தத் தலைவர் தெரிவுக்குப் போட்டியிடுகின்றேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தலைவராகுவதற்குக் கிழக்கு மாகாணத்திலும் தகுதியானவர்கள் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதற்காகவே கட்சியின் தலைவர் தேர்தலில் நான் போட்டியிடுகின்றேன். எனது குடும்பம் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தில் இருந்து வந்தது.

இந்தத் தலைவர் தெரிவில் போட்டியிடுகின்ற மூவருமே 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் நாடாளுமன்றுக்கு வந்தவர்கள். அந்தவகையில் சுமந்திரனைப் பொறுத்தவரையில் அவர் ஒரு சிறந்த சட்டத்தரணி. ஆனால், அவர் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வருபவர்.

அவ்வாறு தமிழ்த் தேசியத்துக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் ஒருவர் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தலைவராக வந்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து தமிழ்த் தேசியம் இல்லாது போய்விடும். இவ்வளவு காலமும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கொண்டிருந்த கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம் அத்தோடு இல்லாமல் போய்விடும்.

அதேவேளை, அடுத்த வேட்பாளரான சிறிதரனைப் பார்க்கும்போது அவர் தமிழ்த் தேசியக் கருத்துக்களையே தொடர்ந்து வலியுறுத்துகின்றார். சிறிதரனுக்குச் சர்வதேச நாடுகளிலும் செல்வாக்கு இருக்கின்றது. அவருடன் நான் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது இதனை அவதானித்திருக்கின்றேன்.

ஆகவே, அவர் தமிழ்த் தேசியத்துடன் பயணிப்பவர் என்ற வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தலைவராகுவதற்குப் பொருத்தமுடையவர்.

அதேவேளை, அவரிடம் ஒரு குணம் இருக்கின்றது. புத்திஜீவிகள், முக்கிய பிரதிநிதிகள், சர்வதேச நாட்டுப் பிரதிநிதிகளோ அவரிடம் தலைவர் தெரிவில் விட்டுக்கொடுங்கள், சுமந்திரன் இம்முறை வரட்டும், அடுத்த முறை நீங்கள் வாருங்கள் எனக் கேட்டால் சில வேளைகளில் சிறிதரன் விட்டுக் கொடுத்து விடக் கூடிய நிலை காணப்பட்டது. சிறிதரன் விட்டுக் கொடுத்தால் நேரடியாகச் சுமந்திரன் தலைவராகத் தெரிவாகுவார். அதனைத் தவிர்ப்பதற்காகவே நான் தலைவர் தெரிவில் போட்டியிடுகின்றேன்.

இந்தநிலையில், கிழக்கு மாகாணத்தில் சுமந்திரன் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டார். அப்போது நான் ஆராய்ந்ததில் அவருக்குத்தான் அதிக ஆதரவு நிலைமை காணப்பட்டது. அவ்வேளை திடீரென சிறிதரன் என்னைத் தொடர்பு கொண்டு கிழக்கு மாகாணத்துக்கு வருவதாகத் தெரிவித்தார். அப்போது நான் அவரிடம் தெரிவித்தேன். நீங்கள் தலைவர் தெரிவில் போட்டியிடுவதில் உறுதியாக இருந்தால் நான் விட்டுத் தரத் தயாராக இருக்கின்றேன். ஏனென்றால் தமிழ்த் தேசியம் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது நோக்கம் என்றேன். அப்போது சிறீதரன் "நான் போட்டியிடுவதில் இருந்து பின்வாங்கமாட்டேன்" என்று தெரிவித்தார். நான் சொன்னேன், "தலைவர் தெரிவில் நான் தொடர்ந்து இருப்பேன். நீங்கள் விலகி விடுவீர்களோ என்ற சந்தேகம் உள்ளது" என்றேன்.

நானும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், ஸ்ரீநேசன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நடராஜா ஆகியோரும் சிறிதரனுக்கு ஆதரவாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தீவிர பிரசாரம் செய்தோம். அந்தவகையில் மட்டக்களப்பைச் சேர்ந்த பொதுச் சபையின் 90 வீதமான உறுப்பினர்கள் சிறிதரனுக்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள்.

அம்பாறை மாவட்டத்திலும் சுமந்திரனுக்கு ஆதரவான நிலைப்பாட்டே காணப்பட்டது. ஆனபோதும் நாங்கள் அங்கு சென்று தமிழ்த் தேசியம் தொடர்பாக வலியுறுத்தியபோது 85 வீதமானவர்கள் சிறிதரனுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்கள்.

திருகோணமலையில் நான் அரச உத்தியோகத்தராகக் கடமையாற்றியவன் என்ற வகையில் திருகோணமலை பொதுச்சபைஉறுப்பினர்களுடன்தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டேன். அப்போது அவர்கள் எனக்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள். ஆனாலும், நான் குறித்த விடயத்தைத் தெளிவுபடுத்திய நிலையில் 90 வீதமானவர்கள் தற்போது சிறிதரனுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்கள்.

ஆகவே, கிழக்கு மாகாணத்தில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 90 வீதமான பொதுச் சபை உறுப்பினர்கள் தமிழ்த் தேசியத்துடன் பயணித்து சிறிதரனுக்கே ஆதரவளிப்பர். அதேபோல் வடக்கு மாகாண பொதுச் சபை உறுப்பினர்களும்செயற்படுவார்கள்என நம்புகின்றேன்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறும் தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பில் நான் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கே எனது வாக்கை அளிப்பேன்." – என்றார்.

## பேச்சுக்களைக் குழப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதிப் போரின் நிறைவில் வெள்ளைக் கொடியுடன் வந்த தமிழீழ விடுதலைப்புலிகளைச் சுட்டுக்கொன்றவர்களும் ராஜபக்ஷக்கள்தான் என்றும் அவர் சாடினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலானது இலங்கையில் ஒரு தேசிய பாதுகாப்புப் பிரச்சினையைத் தோற்றுவித்திருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வரும் நோக்கில் ராஜபக்ஷ குடும்பமே இவ்வாறானதொரு பிரச்சினையை உருவாக்கியுள்ளது எனத் தற்போது அம்பலமாகியுள்ளது." – என்றார்.

# அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினர் சுவீகரிப்பதற்குப் பிரயத்தனம்

## அளவீட்டு முயற்சி தடுத்து நிறுத்தம்









(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு – அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை, 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்பட்ட முயற்சி அப் பகுதி மக்களாலும், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் சிலராலும் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டது.

நில அளவை திணைக்களத்தினர் மற்றும், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், குறித்த மாவீரர் துயிலும் இல்லக் காணியை அளவீடு செய்ய வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதி மக்கள் மற்றும் அப்பகுதி அரசியல் கட்சிப் பிரமுகர்களான முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரின் தலையீட்டால் குறித்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு அந்தக் காணியை அளவீடு செய்து, இராணுவத்துக்காகச் சுவீகரிக்கும் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது என்று அப்பகுதி மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும், அங்கு வருகை தந்த நில அளவைத் திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காகக் காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியைத் தற்போது 23ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ளனர். இரணுவத்தினரின் விவசாய நடவடிக்கைகள், இராணுவத்தினருக்கான விளையாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறும் இடமாகவும் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணி காணப்படுகின்றது. அது தவிர குறித்த காணியில் இராணுவத்தினரால் உணவகம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் துயிலும் இல்லக் காணியின் வெளிப்புறத்திலேயே வருடா வருடம் மாவீரர் நாளில் மாவீரர் நாள் அஞ்சலி உறவுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சூழலில் கடந்த வருடம் குறித்த மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினர் விடுவிக்க வலியுறுத்தி மாவீரர்களின் உறவுகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். இதற்கு முன்னரும் பல தடவைகள் நில அளவைத் திணைக்களத்தினர் இவ்வாறு நில அளவீட்டு முயற்சியில் ஈடுபட்டபோதும் மக்களின் எதிர்ப்புக்களால் கைவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## எழுகிறது பேரினவாதப் பெரும் பூதம்

இது தேர்தல் ஆண்டு.

இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டு இறுதியிலேயே அறிவித்து விட்டார். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்று 'ஜனநாயகத் திருவிழா'க்கள் தொடரும் என்றும் அவர் கோடிகாட்டி இருக்கின்றார்.

எது,எப்படி என்றாலும் இந்த ஆண்டில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் விடயங்களில் தலையிடுவதற்கோ, அதில் ஏதேனும் முடிவுகளை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தச் செய்வதற்கோ, தேர்தலுக்கான காலத்தை நிர்ணயம் செய்வதற்கோ பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு - ரணில் விக்கிரமசிங்கவுக்கு - அதிகாரமேதும் கிடையாது. வேண்டுமானால் அவர் ஒரு வேட்பாளராக அதில் போட்டியிடலாம். அவ்வளவுதான். அதற்கு மேல் அத்தேர்தல் விடயத்தில் ஏதேனும் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் அவருக்குக் கிடையாது.

இந்தத் தேர்தலில் அவரும் போட்டியிட்டு, அவர் வெல்லாத வரையில், இந்தத் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்படும் வரை ஜனாதிபதி அதிகாரத்தில் அவர் இருக்க முடியும். அவ்வளவே.

இந்தஜனாதிபதித்தேர்தலைநடத்தும்முழுஅதிகாரமும் - நியாயாதிக்கமும் - தேர்தல் ஆணைக்குழுவைச் சேர்ந்தது. அரசமைப்புச் சட்டத்துக்கு அமையவும், தேர்தல் சட்டங்களின் படியும், அது இத்தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும்.

அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளின்படி, வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும், ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையிலான ஒரு தினத்தில், ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய சட்டப் பொறுப்பு - கடப்பாடு - தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு.

இவ்வாண்டில் ஜனாதிபதி தேர்தல், அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தல் என்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் அவர் அல்லாத வேறு ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவாராயின், அதிலும் - பொதுத் தேர்தல் நடத்துவதிலும் - மாற்றம் ஏற்படக்கூடும்.

தமக்கு வசதியான நாடாளுமன்றத்தை ஏற்படுத்துவதற்காகவும், ஜனாதிபதி தேர்தலில் தமக்கு கிடைத்த ஆதரவை நாடாளுமன்ற ஆசனங்களாக மாற்றுவதற்குப் பயன்படுத்துவதற்காகவும்,தேர்தலில் வெற்றி ஈட்டும் புதிய ஜனாதிபதி உடனடியாகவே நாடாளுமன்றத்தை கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடக் கூடும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவை இரண்டுமே இவ்வருடத்திலேயே நடைபெறக்கூடிய வாய்ப்புகளும் உண்டு.

அதனால் நாட்டில் ஜனநாயகத் திருவிழாவின் போதான தேர்தல் ஜுரம் அடிக்கத் தொடங்கிவிட்டது.

தேர்தல் ஜுரம் என்றதும் தெற்கில் முதல் வெடிப்பது - முளுவது - பேரினவாத வெறி உணர்வு எழுச்சிதானே...! பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிர்த்தனம் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கும்.

அதனைத்தான் இப்போது நாம் காண்கிறோம். எதிர்த்தரப்பில் இருப்பவர்களை விட, தாங்கள் மட்டுமே பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதில் முதன்மை மேலாண்மைச் சக்திகள் என்பதை தென்னிலங்கைச் சிங்களத்துக்குக் காட்டுவதற்காக சிறுபான்மையினரை நிந்தித்து, இனவாதத்தை கிளப்பும் பேச்சுக்கள், செயற்பாடுகளில் இந்தப் பேரினவாத சக்திகள் சிலிர்த்து நிற்கும். எகத்தாளப் பேச்சுக்கள், பேரினவாத அறிவிப்புக்கள், முழக்கங்கள் தெற்கில் தாராளமாக எதிரொலிக்கும்.

இதில் வழமையான ஒரிஜினல் பேரினவாதிகளின் முழக்கம் அகோரமாக இருக்கும். அவை பொறி கலங்க வைக்கும்.

'இராணுவத்தைக் காட்டிக் கொடுத்து தமிழ் வாக்குகளை சுருட்ட ரணில் முயற்சி!' - என்று பேரினவாத வெறிப்போக்கில் மூழ்கிக் கிடக்கும் விமல் வீரவன்ஸவும் -

'ஒற்றை ஆட்சியை வலுவிழக்கச் செய்தால் மொட்டுக் கட்சியில் இருந்து உடனடியாக விலகுவேன்!' - என்று மொட்டுக் கட்சியின் எம்.பியான சரத் வீரசேகரவும் -

முழங்குகின்றமை 'தேர்தல் ஜுரம்' வீசத் தொடங்கி விட்டமையின் விளைவுதான். அந்த ஜுரத்தின் வெளிப்பாடாக வரும் பேரினவாதப் பிதற்றல்கள்தான் இவை. நீறுபூத்த நெருப்பாக அடங்கிக் கிடந்த பேரினவாத உணர்வு, தேர்தல் திருவிழாக் காற்று வீசத் தொடங்கியதும் மெல்ல கனன்று எழுந்து, பேரினவாதப் பெருந்தீயாகப் பரவப் போவதற்கான கட்டியமே இந்த இருவரின் அறிவிப்புகளும்.

பேரினவாத அரசியல் வெறித்தனத்தை மட்டுமே தமது அரசியல் மூலதனமாகக் கொண்டு, தெற்கில் அரசியல் 'பிஸ்னஸ்' செய்யும் உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோருக்கெல்லாம் இந்த தேர்தல் ஜுரம் தொற்ற, அவர்களும் தங்கள் பங்குக்குப் பேரினவாதப் புலம்பல்களை - பிதற்றல்களை - தொடங்கி விடுவார்கள்.

வழமை போல இந்த பேரினவாதப் வெறிப் போக்குப் புலம்பலுக்குப் பயந்த தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களும், அதற்கு ஒத்திசைவாக இனவாதப் புலம்பலுக்கு 'மேட்ச்' பண்ண தங்களின் ஊதுகுழல்களை ஊத ஆரம்பித்து விடுவர்.

இந்த பிதற்றல்களில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் - புரிந்துணர்வு - சகிப்புத்தன்மை - ஐக்கியம் - எல்லாமே பறந்தோடி விடும்.

இதுதானே மாறி மாறி, ஒழுங்கு முறையில் வரும் இலங்கையின் சரித்திரம்...! அது மீண்டும் ஒரு தடவை அரங்கேறப் போகிறது. அவ்வளவு தான்.

# குஜராத்தில் படகு கவிழ்ந்து விபத்து: மாணவர்கள் 14 பேர் உயிரிழப்பு!



குஜராத் மாநிலம் வதோதரா நகரை அண்மித்து அமைந்துள்ள ஏரியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் 14 பேர் மற்றும் 2 ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கிய படகில் 27 மாணவர்கள் பயணம் செய்துள்ளனர் என வதோதரா மாவட்ட ஆட்சியர் ஏ.பி. கோர் தெரிவித்துள்ளார்.

ஹார்ணி என்ற ஏரியில் படகு கவிழ்ந்துள்ளது. படகில் பயணித்த மாணவர்கள் தேடும் பணி நிகழ்விடத்தில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை ஹார்ணி ஏரிக்கு மாணவர்கள் சுற்றுலா நிமித்தமாக சென்றுள்ளனர். இந்தச் சூழலில் 27 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயணம் செய்த படகு ஏரியில் கவிழ்ந்துள்ளது. இதில் 7 மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்போது 14 மாணவர்கள் மற்றும் 2 ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளனர். எஞ்சியவர்களை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீட்பு படை மற்றும் தீயணைப்பு படையினர் இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார்.

படகு கவிழ்ந்த தகவலை அறிந்து வருத்தம் அடைந்துள்ளேன் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களுக்கு 2 லட்சம் ரூபா மற்றும் காயமடைந்தவர்களுக்கு 50,000 ரூபா அரசு தரப்பில் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநில முதல்வர் பூபேந்திர படேல் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

மாநில அரசு தரப்பில் உயிரிழந்தவர்களுக்கு 4 லட்சம் ரூபா மற்றும் காயமடைந்தவர்களுக்கு 50,000 ரூபா வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

தற்போது அவர் வதோதரா விரைந்துள்ளார். அவருடன் மாநில அமைச்சர் ஹர்ஷ் சங்க்வி சென்றுள்ளார். காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

# மாநிலங்களுக்கான நிதியை பெருமளவு குறைக்கும் முயற்சி

## - மோடி அரசு மீது காங்கிரஸ் குற்றச்சாட்டு

நிதி கமிஷனில் பிரதமர் மோடி மற்றும் அவரது தலைமையிலான பா.ஜ.க. அரசின் தலையீடு காரணமாக மாநிலங்களுக்கு சேர வேண்டிய நிதி பெருமளவு குறைவதாக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பான தகவலை தங்களிடம் அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் பகிர்ந்து கொண்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 இல் பிரதமர் மோடியின் ஆட்சி அமைந்தது முதலே மாநிலங்களுக்கு சேர வேண்டிய நிதி குறைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் அவர் நீண்ட ட்வீட் ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில், “14 ஆவது நிதி கமிஷனில் பிரதமர் மோடியே நேரடியாக தலையிட்டு



சட்டத்துக்கு முரணாக மாநிலங்களுக்கு சேர வேண்டிய வரி வருவாயின் பங்கினை களவாடும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

மோடி அரசின் உயர்மட்ட அதிகாரி மூலம் இந்த விவகாரம் தெரியவந்தது. நிதி கமிஷன் 42 சதவீதத்தை பங்காக வழங்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. ஆனால், பிரதமர் மோடி அதைக் காட்டிலும் குறைவான பங்கை வழங்கவே ஆர்வம் காட்டியுள்ளார். ஆனால், பிரதமரின் முயற்சி முழுமை பெறாத காரணத்தால் தனது அரசின் முதல் முழு பட்ஜெட்டை 48 மணி நேரத்தில் அவசர அவசரமாக மாற்ற வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது. அதனால் மக்கள் நல திட்டங்களுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளது.

உண்மையை முற்றிலுமாக மூடி மறைக்க பல லேயர்களை கொண்டு பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்

அரசியலமைப்பின் இந்தப் புறக்கணிப்பு அப்படியே பிரதமர் மோடி அரசின் அசல் நியதியை வெளிக்காட்டுகிறது. ஜி.எஸ்.டி. அறிமுகத்துக்குப் பிறகு மாநிலங்களுக்கு கிடைக்கும் வருவாய் குறைந்துள்ளது. அதே நேரத்தில் அரசுக்கு சேர வேண்டிய உரிய நிதி மறுக்கப்படுவதில் மனித தவறுகளின் தாக்கம் இருக்கவே செய்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானின் தாக்குதலில் ஈரானில் 9 பேர் உயிரிழப்பு!



பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் ஈரானில் 9 பேர் பலியாகியுள்ளனர் என அந்த நாட்டு அரசு ஊடகம் உறுதி செய்துள்ளது.

முன்னதாக, ஈரான் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானில் 2 சிறுமிகள் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டது. இதற்கு கொடுக்கப்பட்ட பதிலடி தாக்குதலில் ஈரானில் 9 உயிர்கள் பறிபோயுள்ளன.

இரு நாடுகளும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் காரணம் கூறி தாக்கி வருகின்றன. இது இன்று முளைத்த புதிய பிரச்சினை இல்லை என்றாலும் ஏவுகணை, ட்ரோன் வீசி தாக்கிக் கொள்வது என்பது சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது.

போர் எப்போதும் ஒரு தேசத்தை மட்டுமோ, சம்பந்தப்பட்ட தரப்புகளை மட்டுமே பாதிப்பதாக அல்லாமல் சிற்றலை விளைவை ஏற்படுத்தும். ஆனால், மாறிவரும் உலக அரசியலில் போர் அதன் தாக்கத்தின் வீச்சை விஸ்தரித்துக் கொள்கிறது.

அப்படித்தான் இஸ்ரேல் – ஹமாஸ் போர் காரணமாக மேற்கு ஆசியாவில் தொற்றிய பதற்றம் மெல்ல மெல்ல ஈரானை ஆக்கிரமித்துள்ளது. மேற்கு ஆசிய பதற்றத்தால் தனது உள்நாட்டு, வெளியுறவு பாதுகாப்பு சவால்கள் மீதான அழுத்தம் தர அண்டை நாடுகளைத் தாக்க வேண்டிய நிர்பந்தத்துக்குள் ஈரான் விழுந்திருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சகம் கூட, பாகிஸ்தான் மீது ஈரான் நடத்திய தாக்குதல் தற்காப்பு நடவடிக்கை என்று அடையாளப்படுத்தி இருக்கிறது.

இந்த நிலையில், ஈரான் எல்லையை அண்மித்துள்ள பகுதிகளில் பாகிஸ்தான் நடத்திய ட்ரோன், ஏவுகணை தாக்குதலில் உயிரிழ்ந்தோரின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் இந்தத் தாக்குதல் குறித்து மார்தட்டிக் கொள்கிறது. இரண்டு நாள்களுக்கு முன்னால் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தை அண்மித்துள்ள எல்லைப் பகுதியில் ஈரான் தாக்குதல் நடத்தியது. அங்கிருந்த இஸ்ரேல் ஆதரவு தீவிரவாத முகாம்களை அழிக்கும் வகையில் தாக்குதல் நடத்தியதாகக் கூறியது.


இன்றுடன் உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய இராணுவ நடவடிக்கை 695 ஆவது நாளை எட்டியுள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 இல் ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய ஏவுகணை தாக்குதலைத் தொடர்ந்து 3 மாதங்களைக் கடந்து பதிலடி கொடுக்கப்படுகிறது.

காசாவில் 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மிகப் பெரிய மனிதாபிமான நெருக்கடியில் காசா சிக்கித் தவிக்கிறது.

24 மணி நேரத்தில் ஈராக், சிரியா, பாகிஸ்தான் என மூன்று நாடுகள் மீது அடுத்தடுத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது ஈரான். இதன் மூலம் சன்னி தீவிரவாத அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கையை அழுத்தமாக ஈரான் கடத்த விரும்புவதாக சர்வதேச விவகாரங்கள் தொடர்பான வல்லுநர்கள் கருதுகின்றனர்.

மேலும், தன்னைச் சுற்றியுள்ள பலவீனமான, அரசியல் ரீதியாக ஸ்திரத் தன்மையற்ற நாடுகளில் இருந்து தனது இறையாண்மைக்கு, பாதுகாப்புக்கு எதிராக செயல்படும் அமைப்புகளைத் துவம்சம் செய்ய தயங்காது என்ற செய்தியை ஈரான் வலுவாகக் கடத்தும் விதமாகவே மூன்று நாடுகள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியுள்ளது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

# லஞ்சம் உள்ளிட்ட 27 குற்றச்சாட்டுகள்: சிங்கப்பூர் அமைச்சர் ஈஸ்வரன் இராஜினாமா



சிங்கப்பூர் அமைச்சர் சுப்ரமணியம் ஈஸ்வரன் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

லஞ்சம் பெற்றமை உள்ளிட்ட 27 குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட் டுள்ளன. இருப்பினும், தாம் குற்றமற்றவரென அமைச்சர் சுப்ரமணியம் ஈஸ்வரன் வாதிட்டுள்ளார்.

கார் பந்தயம் சிங்கப்பூரில் நடைபெற்ற போது, அந்த நாட்டு சுற்றுலாத்துறையை மேற்பார்வை செய்தவராக அவர் நன்கு அறியப்படுகின்றார்.

குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதையடுத்து, அவர் நேற்று தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஊழல், மோசடிகள் அற்ற ஆட்சி நடத்துவதாக சிங்கப்பூர் தெரிவித்து வருகின்ற நிலையில், அமைச்சர் ஒருவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை அந்த நாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# மது போதையில் இருந்த பொலிஸாரால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

## தனக்கு எதிராகப் போலி வழக்குப் பதிவு செய்துள்ளனர் என அவர் தெரிவிப்பு






**(மன்னார் நிருபர்)**

மது போதையில் இருந்தார்கள் எனக் கருதப்படும் பொலிஸார் இருவரினால் கடுமையாகத் தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்கு உள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனக்கு எதிராகப் போலி வழக்குப் பதிவு செய்துள்ளனர் எனப் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் இருவரே மூன்றாம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை இவ்வாறு தாக்கியுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 3 ஆம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்த சி.நகுலேஸ்வரன் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தரே இப்படித் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

கடந்த செவ்வாய்க்கிழமை 16 இரவு நான் வீட்டில் இருந்த போது இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து மது விற்பனை நிலையத்திற்கு வருமாறும், 'உனக்குப் பொங்கல் நீதான் பார்ட்டி வைக்க வேண்டும். வரும் போது 5 ஆயிரம் ரூபா கொண்டு வா' எனவும் கூறினார்கள்.

நான் பணத்துடன் மதுபான சாலைக்கு சென்றேன். என்னிடம் இருந்து 3 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று அவர்கள் மதுபானம் அருந்தினார்கள். மிகுதி 2 ஆயிரம் ரூபாவை என்னிடம் தந்து 'நீ இதை நீதிமன்றத்திற்கு கொண்டு போ. உனக்கு பழைய வழக்கு உள்ளது' - என அவர்கள் தெரிவித்தனர்.

எனக்கு எவ்வித வழக்கும் இல்லை என நான் பொலிஸாரிடம் தெரிவித்தேன்.உடனடியாக எனது இரண்டு கைக்கும் மதுபானசாலைக்கு முன் கை விலங்கைப் போட்டுக்கடுமையாகத் தாக்கினார்கள்.

மோட்டார் சைக்கிளில் ஏற்றியும் என்னை கண்மூடித்தனமாக தாக்கினார்கள். கடுமையாக தாக்கியதினால் 'என்னை தாக்காதீர்கள். நான் சாகப் போகிறேன்!' என்று கூறினேன்.

'நீ செத்துப் போ !' எனக் கூறி என்னைத் தள்ளி விட்டார்கள். பொலிஸார் தாக்கியதில் எனது வலக்கால் உடைந்ததோடு, இடக்காலிலும் கடும் காயம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் என்னை இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். இலுப்பைக்கடவை ஓ.ஐ.சி. 'இருக்கின்ற இரண்டு வாள்களையும் போட்டு இவனுக்கு வழக்கை பதிவு செய்யுங்கள்.' என்று கிறினார்.

'இல்லை என்றால் உங்களுக்கு கேஸ் ஆகும்' என்றார். பின்னர் எனக்கு வழக்கு எழுதிய பின்னர் பள்ளமடு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

பின்னர் என்னை அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மாற்றினார்கள்.

நேற்றைய தினம் புதன்கிழமை (17 ஆம் திகதி) மன்னார் நீதிவான் வைத்தியசாலைக்கு வந்து என்னைப் பார்த்து விட்டு எதிர்வரும் 3 ஆம் மாதம் 28 ஆம் திகதிக்கு தவணையிட்டுச் சென்றுள்ளார்.

எனக்கு இப்போது தான் குழந்தை கிடைத்துள்ளது. எனது பிள்ளைக்கு வயிற்றில் ஒரு சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எனது குடும்பத்தையும், எனது பெற்றோர், சகோதரங்களையும் நான் தான் பார்க்க வேண்டும்.

தற்போது எவ்வித உதவியும் இன்றி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றேன். எனவே இலுப்பைக் கடவை பொலிஸாரின் குறித்த நடவடிக்கைக்கு எதிராக எனக்கு உரிய தீர்வு வேண்டும். - எனப் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

மேலும் பாதிக்கப் பட்டவரின் உறவுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் பொலிஸாருக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் மக்கள் மத்தியில் இருந்து மனித உரிமைகள் ஆணைக் குழு,மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கருணாவின் கட்சித் தலைமைப் பணிமனை மட்டக்களப்பு கல்லடியில் திறந்து வைப்பு!

(பழுவூரான்)

கருணா அம்மானின் கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயம் நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு கல்லடியில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மானின்) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர், கட்சியின் உபதலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பானவருமான ஜெய சரவணா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகள் வரவேற்கப்பட்டு கட்சி தலைமையகம் திறக்கப்பட்டதுடன், கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அதனை தொடர்ந்து கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கட்சி முக்கியஸ்தர்களினால் விளக்கமளிக்கப்பட்டது.















# தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் அணிதிரளவேண்டுமாம்

## இப்படி மட்டக்களப்பில் உபதேசம் செய்கின்றார் கருணா அம்மான்




(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களின் இருப்புக்களைத் தக்கவைக்க வேண்டுமாக இருந்தால் தமிழ் கட்சிகள் அனைத்தும் பதவி, பட்டங்களை துறந்துவிட்டு ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு எங்களுடைய தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கவேண்டும். எங்களுடைய பலவீனங்களைத்தான் எதிரிகள் சிறந்த முறையில் பயன்படுத்தி கொண்டிருக்கின்றனர் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளீதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியில் கருணா அம்மானின் கட்சியான தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைமைக்காரியாலயத்தை நேற்று வியாழக்கிழமை திறந்துவைத்த பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது கட்சி ஆரம்பித்து 7 வருடங்கள் நிறைவடைந்துள்ளது. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 8 ஆசனங்களை பெற்றோம். அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் 30 ஆயிரத்துக்கு மேற்பட் வாக்குகளை பெற்று 72 வருட வரலாற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடித்த பெருமையை நிரூபித்துகாட்டினோம்.

அம்பாறை மாவட்ட மக்கள் கட்சிக்கு அத்திவாரம் இட்ட மக்கள். அவர்களின் நன்றியை ஒருபோதும் மறக்கமாட்டேன். அடுத்த தேர்தலில் யாருடன் இணைந்து செயற்படுவது என்பது தொடர்பில் மத்திய குழு கூடித்தான் நாங்கள் முடிவு எடுப்போம்.

அதேவேளை சிறந்த கூட்டணி தமிழ் தரப்பில் இருந்து வருமாயின் அதனுடன் சேர்ந்து கேட்பதற்கு நாம் தயார். இரண்டு முறை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன்.

இன்று எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலுள்ள வளங்களை கொண்டு வருவதற்காகவே அல்லது மக்களின் தேவைகளை செயற்படுத்தி வளங்களை கொண்டுவருதற்கு முயற்சிக்காமல் அங்கு மிகவும் அநாகரிகமான முறையில் கூச்சலிடுவதும் தனிப்பட்ட குரோதங்களை விவாதிப்பதற்கான களமாக அதைப் பயன்படுத்தி வருவதும்தான் இவர்களுடைய வேலையாக இருக்கின்றது.

தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியை ஆரம்பித்து இன்று நாங்கள் தனித்துவமாக செயல்பட்டு இருக்கிறோம். அந்த வகையில் நாங்கள் இலங்கைத் தமிழர் மகாசபையினுடைய கட்சியில் போட்டியிட்டு அம்பாறை மாவட்டத்தில் எமது பலத்தை நாம் நிரூபித்துக் காட்டினோம்.

நாங்கள் மொட்டு கட்சியுடன் சேர்ந்து எதிர்காலத்தில் பயணிக்க வேண்டிய நோக்கம் எமக்கு இல்லை. தேர்தல் காலத்தில் பல கட்சிகள் போட்டியிடுகின்றன. நாங்களும் போட்டியிடுகிறோம். ஆகவே நாங்கள்தான் வாக்குகளைப் பிரிக்கிறோம் என்பது முட்டாள்தனமான சிந்தனையும் கற்பனையும். உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரை சிறந்த தகுதி மிக்கவர்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் எமது மக்களுக்காக சேவையாற்ற முடியும்.

ஜனாதிபதி உட்பட அனைத்து கட்சி தலைவர்களையும் சந்தித்திருக்கிறோம். ஜனாதிபதியும் நானும் மிகவும் நெருக்கமானவர்கள். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆகவே உறவு என்றும் இருக்கின்றது. இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆகவே எங்களுடைய மக்களின் நன்மைக்காக நாங்கள் அவரை பயன்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது தமிழர்களுடைய பாரம்பரிய கட்சி. அது உண்மையிலேயே விடுதலைப் புலிகளின் தலைவரால் ஒருங்கிணைக்கப்பட்டு 22 ஆசனங்களை பெற்று நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டு வரலாறுகள் இருக்கின்றன. ஆனால் தற்போது இருக்கின்ற தலைமைத்துவங்கள் பலவீனமானவை. அதனால் அக்கட்சி உடைந்து கொண்டிருக்கிறது. மக்களும் இன்று அக்கட்சியை நிராகரித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது செயற்பாடுகளை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

உயித்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட தரப்பினரே விசாரிக்க வேண்டும் என்று அவர்களே கூறி இருக்கின்றார்கள். இந்த விசாரணை முடிவுகள் உண்மையானவையோ தீமையானவையோ என்பதை விட மக்கள் இன்று யார் கொலைகாரர்கள், யார் கொள்ளைக்காரர்கள் என்பதைப் புரிந்து இருக்கின்றார்கள்.

கடந்த ஜனாதிபதிகள் தமிழர்களை ஏமாற்றும் வகையில் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்களே தவிர வெளிப்படையான தன்மை போக்கில் அவர்கள் செயல்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் அமுலாக்கப்படுமாக இருந்தால் இன்று ஒரு பிரச்சனையும் இல்லை. தமிழர்கள் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அதனை வழங்குவதில் பாரிய இடையூறுகளும் இல்லை. நாங்கள் 13 ஆவது திருத்தச் சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என

(14ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதனூடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த இயலும்






சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பும் இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது

இந்தக் கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர்நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறைப் பிரச்சினைகளையும், வங்கிகள் ஊடாகக் கடன் வசதிகளை பெறுவதில் இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்களையும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அந்தக் கருத்துக்களில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்டமுன் மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் எனதெரிவித்திருந்தார்.

அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், துறைசார் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் அணிதிரளவேண்டுமாம்

**(13ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஜனாதிபதியிடம் தனிப்பட்ட ரீதியில் எடுத்து கூறினோம். அந்தச் சட்டத்தை அமலாக்கும் படி கேட்டுக் கொண்டேன். காலம் வரும்போது அதனை அமுலாக்குவார் என அவர் கூறியிருந்தார்.

மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரை விவகாரத்தில், மாடுகள் என்பவை அவர்களுடைய வாழ்வாதாரம். உண்மையிலேயே நம் மக்களின் வேதனை தாங்க முடியாத ஒன்று. எக்கச்சக்கமான மாடுகள் இன்று அழிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக உண்மையிலேயே நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் அதிகாரத்தில் இருக்கும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிழக்கு ஆளுநரும்தான். அவர்கள் ஒன்று கூடி ஒருமித்த கருத்துடன் ஜனாதிபதியிடம் கதைத்து இவ் விடயத்தை அரசியலாக்காமல் இதை மக்களுக்கான தீர்வாக பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆனால் இங்கு இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதனை அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்திக் கொண்டு தனிப்பட்ட முறையில் சென்று ஜனாதிபதியை ஆளுக்கு ஒரு விதமாக கதைத்து சந்திப்பதனால் இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் தான் இதுபோன்ற அத்துமீறல்கள் நடைபெறுகின்றன. சில மத குருமார்களை வைத்துக்கொண்டு, இனவாதத்தைத் தூண்டிக்கொண்டு, இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, பிள்ளையானாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத்தை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து தங்களுடைய காணி பிடிக்கின்ற பிரச்சினைகளையும், கோழி பிடிக்கின்ற பிரச்சனைகளையும் கொண்டு போய் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றார்களோ தவிர, மக்களுக்கு தேவையான விடயங்கள், பிரச்சினைகளை விவாதிப்பதில்லை. எங்களுக்கு சிறந்த அதிகாரம் வருகின்ற பொழுது நாங்கள் மேய்ச்சல் தரை பிரச்சினையை உடனடியாகத்தீர்த்து வைப்போம்.

நான் மட்டக்களப்பு மண் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய மக்களின் மரியாதை இன்று காற்றிலே பறக்கிறது. இவர்களது செயல்பாட்டினால் அதை அவர்கள் உண்மையிலேயே அறிந்து கொண்டு தங்களை திருத்திச் செயல்பட வேண்டும். அதே வேளை தமிழ் மக்கள் எதிர்காலத்தில் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன். – என்றார்.




# எம்.ஜி.ஆரின் பிறந்ததினம் பாசையூரில் கொண்டாட்டம்

(பிரபாகரன் டிலக்சன்)

தென்னிந்திய திரைப்பட நடிகரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் 107 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வெகு விமர்சையாக முனெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை அப்பகுதி மக்களும் இந்தியாவிலிருந்து வருகை தந்த எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற உறுப்பினர்களும் இணைந்து கேக் வெட்டி எம்.ஜி.ஆரினுடைய பிறந்த தினத்தை கொண்டாடினார்கள்.

இதன்போது எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன் வறுமை கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

CLICK HERE VIDEO













# தோப்பூர் சின்னக்கழுவான் ஆற்றில் முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பு

## கழிவுகளை வீசுவதால் அவை விரைந்து பெருக்கம்



(எம்.எம்.நௌபீக்)

தோப்பூர் சின்னக்கழுவான் ஆற்றில் முதலைகள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் இப்பிரதேசத்தின் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகள் அபாயத்தை எதிர் நோக்குகின்றனர். மேய்ச்சலுக்காக செல்கின்ற கால்நடைகளையும் அவை பிடிக்கக்கூடுமெனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாற்றில் குறுகிய காலத்திற்குள் சர்வசாதாரணமாக முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பதற்கு இப்பிரதேசத்தில் கோழி இறைச்சிக்கடை உரிமையாளர்கள் சிலர் கழிவுகளை வீசுவதுதான் பிரதான காரணம் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதைத் தொடர்ந்து சில மாட்டிறைச்சி கடை உரிமையாளர்கள் சிலரும் மறைமுகமாக கழிவுகளை வீச ஆரம்பித்துள்ளனர் எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடரும் போது எதிர் காலத்தில் மனிதர்கள் முதலைகளுக்கு இரையாகக் கூடும் எனவும், இதனை உரிய அதிகாரிகள் தடுத்து நிறுத்தி முதலைகள் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் மனித உயிர்களைக் காப்பாற்ற முடியும் எனவும் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.



# குறைவடைந்த காற்றின் தரம் விரைவில் வழமைக்கு திரும்பும்

நாட்டின் பல பகுதிகளில் குறைவடைந்திருந்த காற்றின் தரமானது, படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு மற்றும் காலியை அண்மித்த பகுதிகளில் இவ்வாறு காற்றின் தரம் குறைவடைந்திருந்தது.

நேற்று முன்தினம் கொழும்பின் வளிமாசுபாட்டு தரக்குறியீடு 100 வரை அதிகரித்ததாகவும் ஏனைய பகுதிகளில் வளிமாசுபாட்டு தரக்குறியீடு 50 முதல் 100 புள்ளிகளுக்கிடையே பதிவான தாகவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# விசா நடைமுறைகளை இலகுபடுத்தத் தீர்மானம்




நாட்டில் விசா முறையை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குடிவரவு – குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பல அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.01.2024




தேவையற்ற மனக் கவலைகள் இன்று உங்கள் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும். அத்தகைய உணர்வுகள் ஏற்படாமல் சமாளிப்பதன் மூலம் நீங்கள் நற்பலன் பெற முடியும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய நேரிடலாம். கவனத்துடன் இருந்தால் சிறப்பாக செயலாற்ற முடியும்.

கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு காரணமாக உறவில் சலசலப்பு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. பணத்தை இழக்கும் வாய்ப்பிருப்பதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

இன்று உங்களுக்கு தொண்டையில் வலி ஏற்படலாம். குளிர்மையான பொருள்கள் உண்பதை தவிர்க்கவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை பெறலாம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரனமாக நேரமும் உழைப்பும் அதிகம் தேவைப்படும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

உறவில் சுமுகமான நிலை இருக்காது. மனம் திறந்து பேசி புரிய வைப்பதன் மூலம் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம்.

இன்று பணவரவு இல்லை. பணத்தட்டுப்பாடு காரணமாக கவலைகள் ஏற்படும். கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவம் நன்மை அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. உங்கள் செயல்களில் வெற்றி பெறுவதற்கான வலிமையும் ஊக்கமும் இன்று காண்பீர்கள். மொத்தத்தில் இன்றைய நாள் உங்களுக்கு செழிப்பைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி நல்ல பெயரும் வெற்றியும் பெறுவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாகவும் பக்குவமாகவும் பேசி செயல்படுவீர்கள். அதனால் புரிந்துணர்வு அதிகமாகும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்காக சலுகையும் ஊக்கத்தொகையும் பெறுவீர்கள்.

இன்று உங்கள் மனம் உற்சாகத்துடன் இருக்கும். எனவே ஆரோக்கியத்தில் எந்த குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். பணத்தை பெருக்கும் புதிய வழியைக் காண்பீர்கள். எதிர்பாராத செல்வ ஆதாயங்களை இன்றைய நாள் உங்களுக்கு பெற்றுத் தரும்.

தொழிலில் வெற்றி கிடைக்கும். பணியை விரைந்து முடிப்பீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பெருகும். உறவு வலுப்படும். திருப்திகரமாக இருக்கும்.

இன்று பணவரவு தாராளமாக இருக்கும். நண்பர்களிடமிருந்தும் பண உதவி கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கமான மருத்துவ பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. எந்தவொரு செயலிலும் தெளிவாக சிந்தித்து முடிவெடுங்கள். மற்றவர்களுடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

இன்று திறமையாக செயலாற்றுவதில் தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். இன்று சக பணியாளர்களுடன் நல்லுறவு பேண முடியாது.

கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படலாம். நல்லுறவைப் பேண அனுசரித்து அமைதியுடன் பேசவும்.

இன்று எதிர்பாராத பண விரயங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். எனவே செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

அதிக வேலை காரணமாக சோர்ந்து போவீர்கள்.




நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் இன்று கிட்டாது. உங்கள் தினசரி செயல்களில் கூட இன்று மாற்றங்கள் செய்து கொண்டே இருக்க வேண்டியிருக்கும். நம்பிக்கை இழக்க நேரிடலாம். தன்னம்பிக்கையுடன் போராடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். சக பணியாளர்களிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுமை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் துணையைப் புரிந்து கொண்டு பொறுமையுடன நடந்து கொள்ளுங்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. நிலைமையை சமாளிப்பதில் சிரமம் ஏற்படும்.

இன்று கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக உள்ளது. இன்று முன்னேற்றத்திற்கான வழிமுறைகளும் நீங்கள் எதிர்பார்த்த வெற்றியும் கிட்டும். உங்கள் எண்ணங்கள் ஈடேறும்.

இன்று உங்கள் திறமைக்காக மேலதிகாரியின் பாராட்டைப்பெறுவீர்கள். உங்கள் பணியின் மூலம் உங்கள் மேலதிகாரிக்கு பெருமை ஏற்டுத்தித் தருவீர்கள்.

கணவன் மனைவிக்குள் சுமுகமான உறவு இருக்கும். உங்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பயனுள்ள முடிவை எடுப்பீர்கள்.

இன்றைய பண வரவு திருப்திகரமாக இருக்கும். இன்று உபயோகமான வழிகளில் பணத்தை செலவிடுவீர்கள்.

உங்கள் உற்சாகமான மனநிலையின் காரணமாக இன்று நாள் முழுவதும் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று முன்னேற்றமான நாளாக இருக்கும். இன்று தடைகளைத்தாண்டி முன்னேறி சாதனை படைப்பீர்கள்.

இன்று நீங்கள் பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்வீர்கள். உங்களது இந்த மனப்பான்மை காரணமாக பணியை விரைந்து முடித்து உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையாருடன் உண்மையான அன்புடன் நடந்து கொள்வீர்கள். அதனால் உறவு வலுப்படும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கி இருப்பு நிலை நல்ல முறையில் இருக்கும்.

இன்று நல்ல உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.01.2024

## தனுசு

இன்று பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யோகா அல்லது தியானம் செய்யுங்கள்.

இன்று பணிகளை விரைந்து முடிப்பதில் சற்று சிரமம் இருக்கும். அதிக வேலை காரணமாக வேலையில் தவறுகள் ஏற்படலாம். கவனமாக வேலை செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமாக பழகுங்கள். அதனால் உங்களுக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்காது. நீங்கள் எதிர்பார்த்ததை விட செலவுகள் அதிகமாக இருக்கும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

இன்று உங்களுக்கு தலைவலி உபாதைகள் ஏற்படலாம். கடவுளை தியானம் செய்வதன் மூலம் அதன் உபாதையிலிருந்து விடுபடலாம்.

## கும்பம்

இன்று அமைதியான மற்றும் சந்தோஷமான சூழல் இருக்கும். இன்று நீங்கள் உங்கள் இலக்கை அடைவதற்கு நேர்மறையான எண்ணத்துடன் செயல்படுவீர்கள்.

இன்று பணியின் மூலம் ஆதாயம் கிடைக்கும். நீங்கள் இன்று திறமையாகவும் துல்லியமாகவும் பணியை முடிப்பீர்கள்.

இன்று கணவன் மனைவி நட்புறவுடன் பழகுவீர்கள். அதனால் அன்பும் அன்யோன்யமும் அதிகரிக்கும்.

இன்று பணவரவு காணப்படும். உங்கள்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்கு நிதிநிலைமை போதுமானதாக இருக்கும்.

இன்று உற்சாகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

## மகரம்

நீங்கள் எதிர்பாரத்த பலன்கள் இன்று கிடைப்பது அரிது. இன்றைய நாள் உங்களுக்கு குறைந்த அளவே அனுகூலமாக இருக்கும்.

இன்று பணிச் சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு வேலை செய்யுங்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை மற்றும் நகைச்சுவை உணர்வுடன் பழக வேண்டிய நாள். நட்புடன் பேசினால் நல்லுறவைப் பேணலாம்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. கூடுதல் செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

தாயின் உடல்நிலை பற்றிய கவலை இருக்கும். எனினும் சிறிய அளவிலான நோயாகத்தான் இருக்கும்.

## மீனம்

இன்று எதிர்மறையான எண்ணங்கள் உங்கள் மனதில் தோன்றலாம். அதைத் தவிர்த்தால் முன்னேற்றம் உண்டாகும். எதையும் யதார்த்தமாக அணுகுங்கள்.

கவனக்குறைவால் வேலையில் தவறுகள் ஏற்டலாம். திட்டமிட்டுத் திறமையுடன் செய்வதன் மூலம் வெற்றி காணலாம்.

அன்பைக் கொடுத்து அன்பை வாங்குவதன் மூலம் சந்தோஷத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் இருக்கும். நீங்கள் ஏற்றுக் கொண்ட அல்லது ஒப்புக் கொண்ட காரியங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடலாம். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று முதுகு வலி வர வாய்ப்பு உள்ளது. இறை வழிபாடு அல்லது தியானம் மூலம் ஆரோக்கியத்தை வலுப்படுத்தலாம்.








# கொக்குவிலில் விசேட டெங்கு ஒழிப்பு பல வீடுகளுக்குச் சிவப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம் – கொக்குவில் பகுதியில் பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் நேரடி பங்கேற்புடன் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொக்குவில் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டனர். இதன்போது வீடுகளில் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்கள் அகற்றப்பட்டதோடு பல வீடுகளுக்குச் சிவப்பு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன.









# பொது அரங்கேற்றக்கலை வகைப்படுத்தல் சட்ட வரைவு ஜனாதிபதியின் செயலாளரிடம்

பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் ஆக்கப்பூர்வ உரிமைகளை பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு பொது அரங்கேற்றக்கலை வகைப்படுத்தல் சட்ட வரைவு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழுவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

திரைப்படம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து, புதிய சர்வதேச போக்குகள் மற்றும் தர நிலைகளுக்கு ஏற்ப இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அரச தாதியர்கள் சங்கத்தின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவு!



அரச தாதியர் அதிகாரிகள் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு நேற்று காலை 07 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

வைத்தியர்களுக்கு மாத்திரம் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதனிடையே, வைத்தியர்களுக்கு மாத்திரம் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு எதிராக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட சுகாதார தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்த சம்மேளனத்தில் 72 தொழிற்சங்கங்கள் இணைந்துள்ளன என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் ஷானக போபிட்டிய தெரிவித்துள்ளார்.

## நாளையும் மறுதினமும் சிறுவர்களுக்கு சின்னம்மை தடுப்பூசி செலுத்த ஏற்பாடு



நாட்டில் இதுவரை சின்னம்மை தடுப்பூசிகள் செலுத்தப்படாத சிறுவர்களுக்கு எதிர்வரும் 20 ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் (நாளையும் மறுதினமும்) அந்தத் தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அதன் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். ஆர்னல்ட் இதனை தெரிவித்துள்ளார்.

9 மாதம் முதல் 15 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு இந்தத் தடுப்பூசி செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 6 மாதம் முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கான மேலதிக சின்னம்மை தடுப்பூசிகளும் எதிர்வரும் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் செலுத்தப்படும் என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். ஆர்னல்ட் தெரிவித்துள்ளார்.

அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு சென்று இந்தத் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஈழத்தமிழா! என்னதான் தீர்வு?

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல் சிங்கள ஆட்சியாளர்களுக்கும், வடக்கு கிழக்கு வாழ் தமிழ் இனத்திற்கும் இடையில் பகையும் போட்டியும் போராட்டமும் தொடர்கின்றன. சிங்கள ஆட்சியாளர் இலங்கையை தனிச் சிங்கள, பௌத்த நாடாக மாற்றுவதைக் குறியாகக் கொண்டுள்ளனர். தமிழர் இனப்பாகுபாடின்றி தமது ஆட்சி தம்மிடம் இருக்க வேண்டும் என்று போராடுகிறார்கள். இதில் இதுவரை இந்த இரு பகுதியாரின் முன்னேற்றம் என்ன என்று பார்ப்போம்.

### சிங்கள ஆட்சியாளர் சாதனை:-

1. அண்ணளவாக கிழக்கு மாகாணத்தின் அரைப்பங்கைப் பிடித்திருக்கும் அம்பாறை சிங்கள மாவட்டத்தை உருவாக்கியுள்ளனர். அதனால் இனிமேல் கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஆட்சி அமைய முடியாது.

2. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல இலட்சம் ஏக்கர் காணிகளை தமிழர்களிடமிருந்து பறித்து விட்டனர். ஓர் உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 14 வீதமான நிலம் மட்டுமே இப்போது தமிழர் கையில் உள்ளது.

3. நூற்றுக்கணக்கான தமிழர்களின் வரலாற்று வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

4. பல நூற்றுக்கணக்கான பௌத்த விகாரைகள் தமிழர் பகுதிகளில் அமைக்கப்பட்டு அவற்றைச் சூழவுள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைப் பிடித்து சிங்கள மக்களை அக்காணிகளில் குடியேற்றியுள்ளார்கள்.

5. போரினால் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை நிர்மூலமாக்கிவிட்டனர். தொடர்ந்தும் சில இலட்சம் படையினரை தமிழர் பகுதிகளில் நிறுத்தி தமிழரை அடக்கி அவர்களின் சுதந்திர வாழ்வையும் உரிமைகளையும் பிடுங்கியுள்ளனர். நினைவஞ்சலிக்கும் தடை விதித்துள்ளனர்.

6. போரினால் மக்களை அழித்தும் பிற நாடுகளுக்குப் புலம்பெயரச் செய்தும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை வெட்டிக் குறைத்துள்ளனர். உதாரணமாக யாழ்மாவட்டம் 11இல் இருந்து 7 ஆகிவிட்டது

7. தனிச் சிங்கள, பௌத்த நாட்டை உருவாக்குவதில் 65 வீதம் வெற்றி பெற்றுள்ளதோடு இன்னும் சிலவருடங்களில் அதை பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றனர்.

### தமிழர் தரப்பின் சாதனை:-

1. ஆறுதற் பரிசான மாகாண சபைகளும்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததோடு குற்றுயிராக இருந்த சபைகளுக்கும் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக தேர்தல் நடத்தப்படவில்லை.

2. கடந்த 14 வருடமாக எமது ஒரே சாதனையாக, பொறுப்புக் கூறலுக்கு மட்டும் குரல் கொடுத்தும் அதில்கூட ஒரு அங்குலமேனும் முன்னேறவில்லை. கொண்டு வந்த ஜெனீவாத் தீர்மானத்தை வீதியில் போட்டு தீயிட்டோம். மனித உரிமைப் பேரவை, தீர்மானங்களை நிறைவேற்றினாலும் அதை இலங்கையில் செயற்படுத்தும் சக்தி, அதிகாரம் அந்தப் பேரவையிடம் இல்லவேயில்லை.

3.தாயகத்தில் ஒற்றுமையாக இருந்த தமிழரின் அரசியற் கட்சியை மட்டும் துண்டு துண்டாக உடைப்பதில் வெற்றி கண்டுள்ளோம்.

4. ஈழத்தமிழர் மேன்மையான, சந்தோசமான, சுதந்திர, சுயாதீன வாழ்வை அடைவதற்கு எந்தவிதமான நடைமுறைச் சாத்தியமான முழுமையான திட்டமும் (road map) இல்லாமல் தாயகத் தமிழரைப் பணம் படைத்த புலம்பெயர் தமிழர் சிலர் ஆள நினைக்கிறார்கள்.

5. தாயகத் தமிழர் பிரியாணி சாப்பிட உரிமை உள்ளவர்கள். அது கிடைக்கும்வரை வேறு எதையுமே சாப்பிடக்கூடாது. பிரியாணி இல்லையென்றால் பட்டினி இருந்து செத்து மடியுங்கள். அப்போதுதான் உங்களுக்குப் பிச்சைபோட்டு உங்களை நாம் ஆளலாம் என்று தாயகத்தமிழருக்குப் போதனை செய்துகொண்டு புலம்பெயர் தமிழர் சிலர் வெளிநாடுகளில் உல்லாசக் கொண்டாட்டங்களில் திளைத்துள்ளார்கள்.

6. தாயகத் தமிழருக்கு குறிப்பிட்ட சில புலம்பெயர் தமிழரைத் தவிர வேறு யாருமே எந்த நன்மையையும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அவர்களைக் காட்டிக் கொடுப்போர் அல்லது புறமுதுகில் குத்தும் துரோகிகள் என்று தனிப்படக் கொத்திக் குதறுகிறார்கள்.

7.தாயகத்தில் எதையுமே செய்யாது செய்ய வக்கில்லாமல் வெளி நாடுகளில் மட்டும் கொடி பிடிப்பதிலும் கூக்குரல் இடுவதிலும் எந்தத் தமிழனையும்

தொடர்ச்சி ▼

# ஈழத்தமிழா! என்னதான் தீர்வு?

தொடர்ச்சி ▲

சிந்திக்க விடாமல் ஊடகப் பலத்தால் உண்மைகளை மறைத்து, கோப, குரோத உணர்ச்சிகளை மட்டும் ஊட்டி, உசுப்பேற்றி, அவர்களின் நிம்மதியான வாழ்வைக் கெடுத்து, ஒரு கொதி நிலையில் வைத்துக் கொண்டு இல்லாதவர்களை இருப்பதாகக் காட்டி சில புலம்பெயர் தமிழர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிப் பண வசூல் செய்வதில் வெற்றிபெற்றுள்ளனர்.

75 வருடங்களாக வேறு எதையும் சாதிக்கவில்லை.

**ஈழத்தமிழா, என்னதான் தீர்வு?**

இப்போது நமக்குள்ள ஒரே மாற்றுவழி இராஜதந்திர போராட்டமே. அதற்கு நம்மிடமுள்ள ஆயுதம் அந்தத்துறையில் நமக்கு இருக்கக்கூடிய மூளைபலம் மட்டுமே. அந்தந்தப் போரை அந்தந்த வல்லுநரிடம் விடுவதே விவேகமாகும். எல்லாப் போரையும் நாமே செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டால் விளைவு பேரழிவு தான். மருத்துவர் தொழிலை பொறியியலாளர் செய்ய முடியாது. உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நகர்வுகளை மிக மிக நுணுக்கமாக அறிந்து, நமது பலம், பலவீனங்களை உணர்ந்து சந்தர்ப்பங்களைத் தவறவிடாது, மிகச் சரியான காய் நகர்த்தலை மட்டுமே நம்மால் செய்ய முடியும். அதையே செய்யவேண்டும். அதுவே இராஜ தந்திரமாகும்.

**எப்படிச் செய்யலாம்?**

1. நமது அரசியல் மற்றும் அனைத்து உரிமைகளையும் பறித்து வைத்திருப்பது தென்னிலங்கை அரசுதான். அது வேறு எவரிடமும் இல்லை. அதைப் பறித்து வைத்திருக்கும் சிங்கள அரசிடமிருந்துதான் அதைத் திரும்பப் பெற வேண்டும். பறிக்கப்பட்ட எமது உரிமைகள் சர்வதேசத்திடம் இல்லை என்பதால் இலங்கை அரசை விலக்கி வைத்துக்கொண்டு சர்வ தேசத்திடம் இருந்து அதை நாம் பெறமுடியாது. சர்வதேசம் மருத்துவிச்சிப் பணிதான் செய்ய முடியும்.

2. இவ்வுலகில் எந்தவொரு நாடோ, மக்களோ தமக்கு லாபம் இல்லாமல் வெறும் நீதி அநீதி, தர்மம், அதர்மம் பார்த்து செயற்படுவதில்லை. தமிழர்களாகிய நாமோ – குறிப்பாக எமது பலம் வாய்ந்த புலம்பெயர் தமிழர் அமைப்புகளோ கூட – இதற்கு விதிவிலக்கல்ல. ரோஹிங்கிய முஸ்லிம்களை எந்த முஸ்லிம் நாடும் காப்பாற்றவில்லை. இப்போது பாலஸ்தீன மக்களைக் கூட எந்த நாடோ உலகமோ காப்பாற்றவில்லை. இந்த யதார்த்தத்தை நாம் உணரவேண்டும்.

சர்வதேசத்திடம் நாம் ஏமாந்து விடாமல் எம்மால் அவர்களுக்கும் நன்மை உண்டு என்ற நிலையை உருவாக்கி, அவர்களின் உதவியைப் பெறவேண்டும். இலங்கையின் பூகோள அமைவிடமே எமது துருப்புச் சீட்டாகும். தமது நன்மைக்காக, எமக்கு உதவியாக இலங்கை அரசுக்கு தமது அழுத்தங்களைப் பயன்படுத்துவதைத் தவிர சர்வதேசத்தால் வேறு எதையும் செய்ய முடியாது, செய்யப் போவதுமில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். பிராந்திய வல்லரசு இந்தியாவும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஐக்கிய நாடுகள் சபையும் இப்படியான உலக நாடுகளின் சங்கம்தான். அது தர்மதேவதையின் நீதிமன்றமல்ல.

3. அரசகட்சி, எதிர்க்கட்சி என்று ஆட்சியைப் பிடிக்கும் போட்டியில் இனவாதமே அவர்களின் மலிவான சந்தைப் பொருள். எமது கோரிக்கையைப் பரிசீலிக்க ஒரு கட்சி முன்வந்தாலும் மறு கட்சி இனவாதத்தால் தடுத்து விடும். ஆனால் இருகட்சிகளும் சேர்ந்து ரணில் – மைத்திரி அரசு ஏற்பட்டபோது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு தீர்வுக்கு முயற்சித்தோம். 75 வீதம் முன்நகர்ந்தாலும் பின்னர் ரணில் மைத்திரி பகைமையால் அதுவும் தடைப்பட்டது.

4. இப்போது நாடளாவிய பொருளாதாரப் பிரச்சனை பூதாகாரமாக எழுந்துள்ளது. அதுவும் நமக்கு சாதகமான சந்தர்ப்பமே. நாட்டின் இனப்பிரச்சினைதான் பொருளாதாரப் பிரச்சினையாக உருவெடுத்திருப்பதை சிங்கள மக்கள் – குறிப்பாக இளம் சந்ததியினர் – உணரத் தொடங்கி விட்டார்கள். ஜனாதிபதியைத் துரத்தும் அளவுக்கு – முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை காலிமுகத் திடலில் அனுட்டிக்கும் அளவுக்கு – அந்த அறகலயப் போராட்டம் அமைந்தது. அதனால் ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தோடு வந்த ரணில், ராஜபக்ஷவின் மொட்டுக் கட்சியால் ஜனாதிபதியானார். சிங்கள இளையோர் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியை மீண்டும் மழுங்கடித்து, இனவாத அரசியலை முன்னெடுப்பதிலேயே ரணில் – ராஜபக்ஷ அரசு இப்போது ஈடுபட்டுள்ளது.

அதைத் தடுத்து விழிப்புணர்வு கொண்ட சிங்கள மக்களையும், அறிவுபூர்வமான சிங்களச் சிந்தனையாளரையும் இணைத்துக் கொண்டு, இலங்கையை இனவாத அரசியலில் இருந்து மீட்டு, யாரும்



தொடர்ச்சி ▼

# ஈழத்தமிழா! என்னதான் தீர்வு?

தொடர்ச்சி ▲

இனஅடிப்படையில் பாதிக்கப்படாமல், அனைத்து இனமக்களும் சமமாக வாழக்கூடிய அரசை உருவாக்குவதே எமது இராசதந்திரமாக இருக்க வேண்டும். அந்த வழியைத்தவிர எமக்கு வேறு வழியே இல்லை. வெறும் பழிவாங்கும் எண்ணம் தற்கொலை முயற்சியே. எமது இலக்கை அடைய வேறு நடைமுறைச் சாத்தியமான முழுமையான வேலைத்திட்டம் இருந்தால் யாரவது முன்வைக்கலாமே. வெறும் வாய்வீரம் பேசி காலம் கடத்த வேண்டாம்.

5. சிங்கள அரசியல்வாதிகள் தமது இனவாத அரசியலுக்குப் படையினரை மட்டுமன்றி பவுத்த மதத் துறவிகளையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் இந்தப் பொருளாதாரப் பிரச்சினை பௌத்த துறவிகளையும் சிந்திக்க வைத்துள்ளது. தாம் பௌத்த மதத்தைக் கைவிட்டதால்தான் இப்படி வந்துள்ளதோ என்றும் அவர்களைச் சிந்திக்க வைத்துள்ளது. பலர் தமது தர்மபதப் புத்தகத்தைப் புரட்டத் தொடங்கியுள்ளார்கள். இந்த வாய்ப்பையும் நாம் பயன்படுத்த வேண்டும். அறகலயப் போராட்டத்தில் கணிசமான பிக்குகளும் பங்குபற்றினர். பௌத்த துறவிகள் இலங்கை அரசியலிலும் சிங்கள மக்களிடமும் மிகுந்த செல்வாக்கு உள்ளவர்கள். அவர்கள் பலத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதே எமது சாதுர்யமாகும். ஆனால் ஏமாறாமல் இருப்பதுதான் எமது வல்லமையாக, வீரமாக இருக்க வேண்டும்.

### இந்த அடிப்படையிலான செயற்பாடுகள்:-

தமிழர் தரப்பில் எந்த அரசியற் கட்சியோ, அமைப்புகளோ இந்த அடிப்படையிலான இராசதந்திர நகர்வுகளை இதுவரை முன்னெடுக்க முடியவில்லை. அதனால் சிந்தனையுள்ள ஒருசில பௌத்த துறவிகளும் ஒரு புலம்பெயர் தமிழ் அமைப்பும் சேர்ந்து இதில் இறங்கி உள்ளார்கள். அது அனைத்து அரசியற் கட்சிகளினதும், அனைத்துப் பௌத்த மத பீடங்களதும் அனைத்து மத அமைப்புகளதும் சிவில் அமைப்புகளதும் சர்வதேசத்தினதும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அத்தனை தரப்பினரும் பச்சைக் கொடி காட்டியுள்ள இத்திட்டத்திற்கு தம்மைத்தாமே புலம்பெயர் தமிழரின் பிரதிநிதிகள் என்று கூறும் சிலரும் அவர்களின் பணத்திற்குத் தாளம் போடும் சில தாயக உதிரிக் கட்சிகளும் எதிர்ப்பைத் தெரிவிப்பதன் நோக்கம் என்ன? தமது வியாபாரம் முடங்கிவிடும் என்ற பயத்தைத் தவிர, வேறு காரணம் இல்லை. யார் குத்தினால் என்ன அரிசியானால் சரிதானே. இவர் குத்தக் கூடாதென்று நாம் ஏன் குத்தி முறிய வேண்டும்? உங்களிடம் சாத்தியமான எந்த வேலைத்திட்ட வரைபடமும் கிடையாது. நீங்களும் செய்யாமல், செய்பவனையும் ஒழித்துவிட வேண்டுமா? உங்களிடம் வேலைத்திட்டம் இருந்தால் அதைச் செய்யலாம்தானே? செய்ய வேண்டாம் என்று யாரும் தடுத்தார்களா?

நாம் சுயநிர்ணயத்திற்காக, சமஷ்டிக்காக, தனியான தேசத்திற்காக மட்டும்தான் போராட வேண்டும், முதலில் பொறுப்புக்கூறல் மூலம் ராஜபக்ஷக்களை தூக்கில் இடவேண்டும், வேறு எதையும் ஏற்கக்கூடாது என்று உடனடிச் சாத்தியமற்றவற்றை 14 வருடங்களுக்கு மேலாக கூறிக்கொண்டு அங்குள்ள மக்களை ஏமாற்றிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்க, பிரியாணி வந்தாலும் அதைச் சாப்பிட அங்கு எவரும் இருக்க மாட்டார்கள். நிலம் எல்லாம் பறிபோய் பலரும் புலம்பெயர்ந்து தாயகத்தில் மக்களும் இல்லாவிட்டால், அப்படித்தான் பொறுப்புக் கூறலில் முழுவெற்றி பெற்று ராஜபக்ஷக்களைத் தூக்கில் போட்டாலும் கூட யாருக்கு என்ன லாபம்? ராஜபக்ஷக்களைத் தூக்கில் போட்டாலும் அப்போதும்கூட தமிழருக்கு வேண்டிய உரிமையைத் தென்னிலங்கை அரசிடம் இருந்துதானே பெறவேண்டும்? எஞ்சியுள்ள தமிழ் மக்களையும் நிலத்தையுமாவது காப்பாற்ற உடனடியாக என்ன செய்யலாம் என்பது பற்றி யாராவது சிந்திக்கிறோமா? அல்லது எமது சுயலாப வியாபாரங்களைக் கருதி வீரா-ப்புப் பேசிக்கொண்டு இனஅழிப்பு, போர்க்குற்றம், பொறுப்புக்கூறல் பற்றி தமிழ் மக்களுக்கு மட்டும் பாடம் எடுத்துக்கொண்டு ஒட்டுமொத்த இனத்தையும் பூண்டோடு அழிக்கப் போகின்றோமா?

இலங்கையில் இப்போது மூன்றாவது தடவையாக உருவாக்கப்பட்ட அரசமைப்பில் 20 தடவைக்குமேல் திருத்தம் செய்தாயிற்று. காலத்திற்கேற்ப, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்படும். இப்போது உள்ள நிலைமைக்கு ஏற்ப ஓர் அரசமைப்பை ஏற்படுத்தினால் நாட்டில் நிலைமை சீரடையும்போது அதைத் திருத்த முடியாதென்றோ அல்லது இன்னொரு புதிய அரசமைப்பை உருவாக்க முடியாதென்றோ சொல்வது மக்களை ஏமாற்றும் தந்திரமே.

இருப்பதைச் சாப்பிட்டு அந்தப் பலத்தில் நின்றுகொண்டு பிரியாணிக்குப் போராடுவதே பகுத்தறிவான செயலாகும்.

முதலில் எஞ்சியுள்ள நிலத்தையும் மக்களையும் தக்கவைக்க உடனடியாகச் செய்யக் கூடியதைச் செய்ய வேண்டும். பொறுப்புக் கூறல் மூலம் ராஜபக்ஷக்களைத் தூக்கிலிடும் உடனடிச் சாத்தியமற்ற விடயத்தைச்சொல்லிக் காலம் கடத்தினால் சிங்கள பௌத்த நாடு அமைந்துவிடும். அதை உடனடியாகத் தடுக்க வேண்டாமா?

### இமாலய பிரகடனம்:-

புரிந்துணர்வு உரையாடல்களை அனைத்து மத, இன மக்களும் சேர்ந்து முன்னெடுப் பதற்கான ஓர் அடிப்படை ஆரம்ப இணக்கப்பாடுதான் இந்த பிரகடனம். ஆறு அம்சங்களைக் கொண்ட இந்த "இமாலய பிரகடனத்தில்" 5 ஆவது பரிந்துரையில் பொறுப்புக்கூறலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதையும் நாங்கள் நிச்சயமாகத் தொடருவோம். தொடர வேண்டும். சிங்கள அரசுக்கு ஓர் அழுத்தம் கொடுக்க உதவும்.

பூரணமான மாகாண அதிகாரப்பகிர்வு, இனவேறுபாடின்றி சமஉரிமை, அனைவருக்கும் சமசந்தர்ப்பத்தை உறுதிப் படுத்தக்கூடிய புதிய அரசமைப்பு என்பன 3 ஆவது பரிந்துரையில் வலியுறுத்தப்படுகின்றது. அதுவரை தற்போதுள்ள அதிகார பகிர்வை இதயசுத்தியோடு முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் எனறும் உள்ளது.

இனம் அல்லது மதம் சார்ந்து எந்தப் பாகுபாடுமில்லாத - மீளப்பெற முடியாத - அரசமைப்பைத் தவிர வேறென்ன நமக்கு வேண்டும். சிங்கள மக்களையும் நாமே ஆளவேண்டுமா?

இது ஒரு சிவில் சமூகச் செயற்பாடு. அரசியற் செயற்பாடு அல்ல. இருதரப்பிலும் உள்ள பயங்களை, சந்தேகங்களை அகற்றி, மக்களை ஒற்றுமையாக்கி, பிரச்சனையைத் தீர்ப்பதில் இருக்கும் தடைகளை நீக்குவதற்கான முயற்சியாகும். அவர்களின் வேலைத்திட்ட வரைபடத்தின் முதலாம் கட்டம் இது. இதனால்அதிகாரபீடம்பிரச்சினையைத்

தொடர்ச்சி ▼

# ஈழத்தமிழா! என்னதான் தீர்வு?

தொடர்ச்சி▲

தீர்க்க நிர்ப்பந்திக்கப் படுதோடு இனவாத சாக்கடை அரசியலிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவும் உதவும். இது பிரச்சினையின் ஆணிவேரைப் பிடுங்கி எறியும் பொதுமக்கள் முயற்சியே அல்லாமல் அரசு செய்யவேண்டிய அரசியற் செயற்பாடு அல்ல. இறுதியில் மக்கள் பிரதிநிதிகள்தான் அதை அறுவடை செய்யவேண்டும். இது ஒரு தூரநோக்கோடு தமிழரின் பிரச்சனையைத் தீர்க்க போடப் பட்டுள்ள (Road Map) வரைபடமாகும். தாயக மக்களின் நலனில் சுயநலமற்ற, உண்மையான அக்கறை உள்ள, தமிழ் மக்கள் இதை முற்றிலுமாக ஆதரித்து தாயகத்தில் அவதிப்படும் மக்களை மீட்டெடுக்க முன்வர வேண்டும்.

**பிரகடன எதிர்ப்புகள்:-**

பொறுப்புக்கூறல் மழுங்கடிக்கப்படுவதாகச் சொல்வது வெறும் ஏமாற்று யுக்தி. அரசதலைவர் என்ற வகையில் மஹிந்தவோடு நாம் பேசிவிட்டோம் என்பதற்காக அவர் செய்த குற்றங்கள் குற்றமில்லை என்று ஆகிவிடாது. இதை விளங்காத சர்வதேசம் இருக்க முடியாது. பொறுப்புக் கூறல் தொடரும். ஓர் அழுத்தத்தைக் கொடுக்கவாவது அது தொடரப்பட வேண்டும்.

**மற்றது மஹிந்தவைச் சந்தித்து படமெடுத்த துரோகம்:-**

இலங்கை அரசு என்றால் அது நாடாளுமன்றமே. இன்றைய நாடாளுமன்றத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மொட்டுக் கட்சிதான். மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்ததான். சிங்கள ஆட்சியாளரோடுதான் பேச வேண்டும் என்றால் இன்றய நிலையில் மஹிந்தவோடுதான் பேசவேண்டும். நாட்டு அரசோடு பேசாமல் நாட்டு மக்களோடு பேசமுடியாது. அதே மஹிந்தவோடு நாடாளுமன்றத்தில் அத்தனை தமிழ்ப் பிரதிநிதிகளும் இருந்து பேசுகின்றார்கள், பேசத்தான் வேண்டும். மஹிந்த இருக்கிறார் என்பதற்காக நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்க முடியுமா?. மஹிந்தவோடு சுரேன் பேசினால் மட்டும் தீட்டுப் பட்டு விட்டதா? புலிகள்கூட மஹிந்த அரசோடுதான் இரு சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

சுயநல, பணபல, ஊடகபல, உணர்ச்சிவச செயற்பாடுகள் மூலம் பெரும்பாலான தமிழரை மூளைச் சலவை செய்து தமது இருப்பையும் பொருளீட்டலையும் பாதுகாத்து வந்த தரப்பினர் மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்பு போல துடிக்கிறார்கள். தற்செயலாக இதன்மூலம் தமிழருக்கு ஏதாவது கிடைத்து விட்டால் தமது தொழில் படுத்து விடுமே என்ற பயத்தில் கன்னாபின்னா என்று அலறத் தொடங்கி விட்டார்கள். கருத்தை கருத்தால் எதிர் கொள்ளாமல் இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தனிப்பட்ட முறையில் தாறுமாறாகத் தாக்கத் தொடங்கியுள்ளார்கள். வெறும் கற்பனையில் சோடித்து இது ரணிலின் திட்டம், மஹிந்தவின் திட்டம், அமெரிக்காவின் திட்டம் என்றெல்லாம் எந்தவிதமான அடிப்படை உண்மையும் அறவே இல்லாமல் காட்டிக் கொடுக்கும் துரோகி, முதுகில் குத்துகின்றான் என்று வெறும் கட்டுக் கதைகளைப் புனைந்து ஏகபோக ஊடகபலத்தால் தமது பக்கக் கருத்துக்களையே பரப்பிக் கொண்டிருப்பதால் உண்மை உணராத நல்ல தமிழரும் ஏதோ அநியாயம் நடந்து விட்டதோ, அபாயம் வருமோ என்று வருந்துகிறார்கள். அந்த நல்ல தமிழருக்காகவே இந்த விளக்கங்களைத் தருகின்றோம்.

# மரக்கறிகளின் விலை உயர்வு ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும்

"மரக்கறிகளின் விலை உயர்வு ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும். நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் வரலாற்றில் முதல் தடவையாக கரட் உள்ளிட்ட மரக்கறிகளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது."

– இவ்வாறு நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவரும் அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார நிலையத்தின் ஆலோசகருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டில் கடந்த வருடம் இறுதியில் பெய்த கடும் மழை காரணமாக அதிகமான பிரதேசங்களில் ஏராளமான பயிர்கள் அழிவடைந்துள்ளன. இதன் காரணமாகவே நாட்டிலுள்ள அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களிலும் மரக்கறிகளின் விலை அதிகரித்து காணப்படுகின்றது. அத்துடன் நுவரெலியா பிரதேச விவசாயிகளிடம் இருந்து கடந்த ஓரிரு நாள்களாகக் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகளும் கரட்டும் சரியான தரம் வாய்ந்தவையாக இல்லை எனவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



தேவைக்கேற்ப கரட் இல்லாதமையே காரணம். அத்துடன் அதிக விலை காரணமாக விளைச்சலுக்கு உகந்த நிலையில் இல்லாத கரட்டும் அறுவடை செய்யப்படுகின்றது.

கடந்த வருடங்களில் நுவரெலியா மத்திய பொருளாதரத்திலிருந்து ஏனைய வெளி மாவட்டங்களில் உள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு நாளொன்றுக்கு 35 ஆயிரம் கிலோ கிராம் கரட் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் தற்போது குறைவடைந்து ஒரு நாளுக்கு ஐந்தாயிரம் ஆறாயிரம் கிலோ அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனால் மத்திய நிலையத்தில் தொழில் புரிந்த 200–க்கும் அதிகமானவர்கள் தற்போது தொழில் இழந்து நடுவீதியில் நிற்கின்றனர்.

இதுபோலவே ஏனைய மரக்கறி வகைகளும் சீரற்ற கால நிலை ஏற்பட்டு அழிவடைந்த காரணத்தால் அவற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு அதிக விலைகளுக்கே விற்பனை செய்யப்படுகின்றது. அவைகளும் சிறந்த தரத்தில் இல்லை என்பதும் உண்மையான விடயம்." – என்றார் .

# 4 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் மன்னார் தாழ்வுபாட்டில் ஒருவர் கைது

(மன்னார் நிருபர்)

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து நேற்று வியாழக்கிழமை ஒரு தொகுதி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டமையோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் போதை மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன எனத் தாழ்வுபாடு கடற்படைக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் கடற்படையினருடன், தலை மன்னார் போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து அந்தப் பகுதியில் உள்ள காணியை சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது அந்தக் காணியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 மில்லி கிராம் எடை கொண்ட 24 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.





கைது செய்யப்பட்ட சந்தேக நபர், மீட்கப்பட்ட போதை மாத்திரைகளுடன் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகிறனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மீட்கப்பட்ட போதை மாத்திரைகளுடன் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் எனத் தெரிகின்றது.

அண்மைய நாள்களாக சட்ட விரோத மான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் இலங்கைக்குக் கடத்தப்படும் போதை மாத்திரைகள் விற்பனைக்காக மன்னாரில் உள்ள சில கிராமங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பாதுகாப்பு துறையினரால் மீட்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மேலும் மூன்று லட்சம் குடும்பங்கள் அஸ்வெசும திட்டத்தில் உள்ளீர்ப்பு

அஸ்வெசும திட்டத்தில் மேலும் 3 லட்சம் குடும்பங்களை உள்ளீர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6 லட்சத்து 40 ஆயிரம் அஸ்வெசும மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, அஸ்வெசும கொடுப்பனவை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 17 லட்சத்தை தாண்டியுள்ளதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்,

மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் காரணமாக இதுவரை அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொண்ட 5 ஆயிரத்து 209 குடும்பங்கள், அந்தச் சலுகையை இழந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த தவணைக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்னர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, எதிர் வரும் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான தவணைக் கொடுப்பனவு கூடிய விரைவில் வங்கிகளுக்கு விடுவிக்கப்படவுள்ளன எனப் பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 11 லட்சம் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளன. அவற்றை கூடிய விரைவில் மீளாய்வு செய்யவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நலன்புரி நன்மைகள் சபை உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பதில் நிதியமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.



# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(தலவாக்கலை)

டெங்கு ஒழிப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப் புணர்வு நிகழ்ச்சி தலவாக்கலை, நாகசேனை நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற் றது.

லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் மற்றும் அக்கரப்பத்தனை பிரதேசசபை அதிகாரிகள் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

நாகசேனை நகரை சுத்தப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெஷினி துரைராஜ் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அகரப்பத்தனை சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் உட்பட ஊழியர்கள், நாகசேனை பிரிவுக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி உத்தியோகத் தர்கள், நாகசேனை கிராம உத்தி யோகத்தர், லிந்துலை பொலிஸ் நிலைய சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள கலந்து கொண் டனர்.



# யுக்திய போதை ஒழிப்புத் திட்டம் வெற்றியடைய துவாப் பிரார்த்தனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாடு தழுவிய ரீதியில் முன்னெ டுக்கப் படும் யுக்திய போதைப் பொருள் ஒழிப்பு திட்டம் வெற்றியடைய கந்த ளாய், தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள சகல பள்ளி வாசல்களிலும் துவாப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட் டது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக் கப்படும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட செயற்றிட்டமான யுக்திய வெற் றியடைய வேண்டியும் நாட்டில் போதை இல்லாது இளம் சமுதாயம் முன்னேற வேண்டியும் இந்தப் பிரார்த்தனை இடம்பெற்றது.





# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழிபசி தீர்த்தல் என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின் ஒரு கட்டம் கடந்த புதன்கிழமை சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்தப் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ.குமாரசாமி நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கி வைத்துள்ளனர்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில்வாய்ப்பு இழப்புகளைத் தொடர்ந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடரின்போது ஆரம்பித்த அற்றார் அழிபசி தீர்த்தல் திட்டத்தைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.





# தோப்பூர் கோட்டத்தில் கச்சான் அறுவடை

**(எம்.எம்.நௌபீக்)**

தோப்பூர் கோட்டத்துக்கு உட்பட்ட தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட கச்சான் செய்கையின் அறுவடை கல்லூரியின் முதல்வர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு அறுவடை செய்தனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் கச்சான் அவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

இதன்போது 70 கொத்துக்கு மேல் கச்சான் அறுவடை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

